செ.வெ.எண்:45 நாள்:24.01.2018

**அரியலூரில்**
**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.K.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., (K.Phanindra Reddy I.A.S.,) அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வளர்ச்சிப் பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்டத்தில் வளர்ச்சி பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை அரசு முதன்மை செயலாளர் **திரு.K.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., (K.Phanindra Reddy I.A.S.,)** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (24.01.2018) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், கால்நடைப்பராமரிப்புத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, பயிர் காப்பீட்டுதிட்டங்கள், மண்வள அட்டை போன்ற துறைகளில் வளர்ச்சி பணிகள் குறித்து அரசு முதன்மை செயலாளர் அவர்கள் சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், பொது சுகாதாரம், ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, காவல்துறை, வளர்ச்சித்துறை, தீயணைப்புத்துறை, வனத்துறை, கல்வித்துறை மற்றும் அனைத்துத்துறை அலுவலர்களுடன் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சித் திட்ட பணிகளின் விவரங்கள் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை அரசு முதன்மை செயலாளர் **திரு.K.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., (K.Phanindra Reddy I.A.S.,)** அவர்கள் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.தனசேகரன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஜி.கே.லோகேஷ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) (பொறுப்பு) ஜே.சுரேஷ்குமார், (வளர்ச்சி) க.சிவக்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் (அரியலூர்) மு.மோகனராஜன், ப.டினாகுமாரி (உடையார்பாளையம்), பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளஆதாரம்) ஆ.தெய்வீகன், இணை இயக்குநர் வேளாண்மை சு.அய்யாசாமி, இணை இயக்குநர் கால்நடைப்பராமரிப்புத்துறை எம்.நஸீர், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் வீ.சி.ஹேமசந்த்காந்தி, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) ஜெ.பாலாஜி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.இளங்கோ, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.